பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

21 12 2024 6 30
சனிக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குவைத் சென்றடைந்த பிரதமர் திரு நரேந்திரமோடிக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.
2. மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் இன்று நடைபெற்ற ஜி எஸ் டி கவுன்சில் கூட்டத்தில் வரி கட்டமைப்புகளை மாற்றியமைப்பது குறித்து விவாதிக்கப்பட்டது,
3. ஒகேனக்கல் இரண்டாம் கட்ட கூட்டு குடிநீர் திட்டப்பணிகள் வரும் ஜூன் மாதம் தொடங்கப்படும் என மாநில அமைச்சர் திரு கே என் நேரு தெரிவித்துள்ளார்.
4. சமூக நீதியை நிலைநாட்டுவதில் பிஜேபி எப்போதும் முன்னிலையில் இருப்பதாக அக்கட்சியின் மாநில தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.
5. வங்கக்கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வுமண்டலம் வலுவிழக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி இரண்டு நாள் பயணமாக இன்று குவைத் சென்றடைந்தார். விமான நிலையத்தில் பிரதமரை அந்நாட்டு துணை பிரதமர் திரு **Sheikh Fahad Yousef Saud Al-Sabah** வரவேற்றார்.

அங்கு வசிக்கும் ஏராளமான இந்திய வம்சாவளியினரும் விமான நிலையத்தில் திரண்டு பிரதமருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இதையடுத்து ராமாயணம் மற்றும் மகாபாரதத்தை அரபு மொழியில் மொழி பெயர்த்த அப்துல்லா பரோன் மற்றும் வெளியீட்டாளர் அப்துல் லத்தீப் அல் நெசப் ஆகியோரை குவைத் விமான நிலையத்தில் பிரதமர் சந்தித்து பேசினார்.

அந்நாட்டில் வசிக்கும் 101 வயதாகும் முன்னாள் இந்திய வெளியுறவு அதிகாரி மங்கல் **sain handa** -வையும் திரு நரேந்திரமோடி சந்தித்தார்.

தமது பயணத்தையொட்டி பிரதமர் வெளியிட்டுள்ள செய்தியில், இந்தியா – குவைத் இடையேயான உறவு வரலாற்று ரீதியிலானது என்றும், பல தலைமுறைகளாக இது தொடர்ந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அந்நாட்டு அமிர் மற்றும் பட்டத்து இளவரசரை சந்திப்பதை தாம் ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக பிரதமர் கூறியுள்ளார்.

குவைத்தில் உள்ள இந்திய சமூகத்தினரை சந்திப்பதையும் மிகுந்த ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக பிரதமர் குறிபிபிட்டுள்ளர்ர்.

குவைத்வாழ் இந்தியர்கள் இருதரப்பு நட்புறவை வலுப்படுத்துவதில் பெரும் பங்களிப்பு அளித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமது பயணம் இந்தியா – குவைத் மக்களிடையேயான நட்புறவை மேலும் வலுப்படுத்தும் என்றும் திரு நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கடந்த 43 ஆண்டுகளில் இந்திய பிரதமர் ஒருவர் குவைத் செல்வது இதுவே முதல் முறையாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரபிய வளைகுடா கோப்பை கால்பந்து போட்டி தொடக்க விழாவிலும் சிறப்பு விருந்தினராக பிரதமர் கலந்து கொள்கிறார்.

திரு நரேந்திரமோடிக்கு நாளை குவைத்தில் உள்ள பயான் அரண்மனையில் பாரம்பரிய அணிவகுப்பு மரியாதையுடன் கூடிய வரவேற்பு அளிக்கப்படுகிறது.

**[]<<<>>>[]**

மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் இன்று நடைபெற்ற ஜி எஸ் டி கவுன்சில் கூட்டத்தில் வரி கட்டமைப்புகளை மாற்றியமைப்பது குறித்து விவாதிக்கப்பட்டது,

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மரில் நடைபெற்ற இக்கூட்டத்தில், சுகாதார காப்பீடு மற்றும் உணவு விநியோக சேவைக்கான வரி விகிதங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

ஆயுள் மற்றும் சுகாதார காப்பீட்டுத் திட்டங்களுக்கான சரக்கு மற்றும் சேவை வரியை குறைப்பது, உயர்தர கைக்கடிகாரங்கள், காலணி மற்றும் ஆயத்த ஆடைகளுக்கான வரியை உயர்த்துவது குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

விமான எரிபொருளை சரக்கு மறறும் சேவை வரி விதிப்பின்கீழ் கொண்டு வருவது குறித்தும் இன்றைய கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

**[]<<<>>>[]**

தமிழக விவசாயிகள் சங்க முன்னாள் தலைவர் நாராயணசாமி நாயுடுவின் நினைவு தினத்தையொட்டி மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சா திரு எல் முருகன் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் தமிழகத்தில் விவசாயிகள் சங்கங்கள் உருவாக அடித்தளம் அமைத்ததுடன், விவசாயிகளின் வாழ்வாதாரம் குறித்து சிந்தித்தவர் நாராயணசாமி நாயுடு என புகழாரம் சூட்டியுள்ளார்.

நாடு முழுவதும் விவசாயிகளை ஒருங்கிணைப்பதில் முக்கிய பங்கு வகித்த நாராயணசாமி நாயுடு, விவசாயத்துக்கான இலவச மின்சாரம், விளைப்பொருட்களுக்கான குறைந்தபட்ச விலை நிர்ணயம் போன்றவற்றை பெற்றுக் கொடுத்தவர் என்றும் திரு எல் முருகன் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

ஒகேனக்கல் இரண்டாம் கட்ட கூட்டு குடிநீர் திட்டப்பணிகள் வரும் ஜூன் மாதம் தொடங்கப்படும் என நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு கே என் நேரு தெரிவித்துள்ளார்.

தருமபுரி மாவட்டம் காரிமங்கலத்தில் வளர்ச்சித் திட்டப்பணிகளை தொடங்கி வைத்து பேசிய அவர், இந்த கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர் ஆகிய நான்கு மாவட்ட மக்கள் பயனடைவார்கள் என்று கூறினார்.

ஜப்பான் நாட்டின் பன்னாட்டு கூட்டுறவு முகமை கடனுதவியுடன் ஏழாயிரத்து தொள்ளாயிரத்து 28 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் இந்த திட்டம் ஓராண்டு காலத்திற்குள் நிறைவேற்றப்படும் என்று அவர் தெரிவித்தார்.

முன்னதாக கிருஷ்ணகிரி நகராட்சியில் 160 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாம் கட்ட பாதாள சாக்கடை திட்டம், புதிய காய்கறி அங்காடி உள்ளிட்டவற்றை அமைச்சர் திரு கே என் நேரு திறந்து வைத்தார்.

17 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட பாதாள சாக்கடை திட்டம் நிறைவடைந்து தற்போது பயன்பாட்டிற்கு வந்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

**[]<<<>>>[]**

தமிழக கோவில்களுக்கு காணிக்கையாக கிடைக்கப்பெற்ற 427 கிலோ தங்கம் வைப்பு நிதியில் வைக்கப்பட்டதன் மூலம் ஆண்டுக்கு ஐந்தரை கோடி ரூபாய் வட்டித் தொகையாக கிடைக்கிறது என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு சேகர்பாபு கூறியுள்ளார்.

சென்னை மாதவரம் பகுதியில் பழமை வாய்ந்த மாரியம்மன் கோவில் புரனமைப்புப் பணிகளை ஆய்வு செய்த பின் அவர் செய்தியாளர்களிடம் பேசினார்.

*( சவுண்ட்பைட் - சேகர்பாபு ) ---43 செகண்ட்*

**[]<<<>>>[]**

சமூக நீதியை நிலைநாட்டுவதில் பிஜேபி எப்போதும் முன்னிலையில் இருப்பதாக அக்கட்சியின் மாநில தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பல்கலைக்கழக துணைவேந்தர்கள் நியமனத்தில் ஆளுநருக்கு எதிரான மாநில அரசின் நிலைப்பாடு காரணமாக மாணவர்கள்தான் பாதிக்கப்படுவதாக தெரிவித்தார்.

துணைவேந்தர் தேர்வுக்குழுவில் , பல்கலைக்கழக மானியக்குழு பிரதிநிதி இடம்பெற வேண்டுமென ஆளுநர் கூறுவது சரியானதே என்றும் திரு அண்ணாமலை கூறினார்.

**[]<<<>>>[]**

மதுரையில் மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்துவது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் திரு அர்ஜூனன் தலைமையிலான தொழில்நுட்பக் குழுவினர் இன்று ஆய்வு மேற்கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு அர்ஜுனன், மதுரை, கோவை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு விரைவில் ஒப்புதல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகக் கூறினார்.

*( சவுண்ட்பைட் - அர்ஜூனன்) --45--- செகண்ட்*

**[]<<<>>>[]**

கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு பண்டிகைகளை முன்னிட்டு சென்னை தாம்பரம் - கன்னியாகுமரி மற்றும் சென்னை சென்ட்ரல் - கொச்சுவேலி இடையே சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

தாம்பரத்திலிருந்து வரும் 24 மற்றும் 31-ஆம் தேதிகளிலும், மறுமார்க்கத்தில் கன்னியாகுமரியிலிருந்து வரும் 25 மற்றும் ஜனவரி ஒன்றாம் தேதியும் சிறப்பு ரயில் இயக்கப்படும்.

சென்னை சென்ட்ரல் கொச்சுவேலி இடையே 23 மற்றும் 30-ஆம் தேதிகளிலும், மறுமார்க்கத்தில் 24 மற்றும் 31-ஆம் தேதியும் சிறப்பு ரயில் இயக்கப்பட உள்ளது.

இதற்கான முன்பதிவு நாளை கலை எட்டு மணிக்கு தொடங்கும் என தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.,

[]<<<>>>[]

முல்லைப்பெரியாறு அணையிலிருந்து பதினெட்டாம் கால்வாய் பாசனத்துக்காக இன்று தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

இன்று முதல் 30 நாட்களுக்கு வினாடிக்கு 98 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படும் என்று ஆட்சியர் திருமதி ஷஜீவனா தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் தேனி மாவட்டம் உத்தமபாளையம் மற்றும் போடிநாயக்கனூர் தாலுகாவிற்கு உட்பட்ட சுமார் நாலாயிரத்து 600 ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும்.

[]<<<>>>[]

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுமண்டலம் அடுத்த 12 மணி நேரத்தில் படிப்படியாக வலுவிழக்கக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது சென்னைக்கு கிழக்கு வடகிழக்கே 480 கிலோமீட்டர் தொலைவில் நிலை கொண்டுள்ள இந்த தாழ்வுமண்டலம் அதே திசையில் நகர்ந்து கடலிலேயே வலுவிழக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அடுத்த இரண்டு நாட்களுக்கு தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும், அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டம் காணப்படும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

[]<<<>>>[]

நாகை மாவட்டம் நாகூரில் பழம்பெரும் பாடகர் ஈ எம் ஹனிபா வாழ்ந்த தெருவிற்கும், சில்லடி கடற்கரை சாலையில் உள்ள பூங்காவிற்கம் அவரது பெயர் சூட்டப்படும் என முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி மற்றும் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதகளில் நிறைவுற்ற வளர்ச்சித் திட்டப்பணிகளை மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்திரு மெய்யநாதன் இன்று தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் அரசு தொழில் பயிற்சி நிலையத்தில் மாணவ மாணவிகளுக்கு தொழிற்கல்வி சேர்க்கைக்கான ஆணைகளை ஆட்சியர் திருமதி உமா இன்று வழங்கினார்.

**[]<<<>>>[]**

விருதுநகர் மாவட்டம் வத்ராயிருப்பு அருகே தாணிப்பாறை ராம்நகரில் மலைவாழ் மக்களுக்கு சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் இலவச சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய சிறுபான்மையினர் சிறுதொழில் கடன்பெற தகுதிவாய்ந்தவர்கள் விண்ணப்பித்து பயனடையுமாறு ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

தோஹாவில் நடைபெற்றுவரும் ஆசிய இளையோர் பளு தூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Asmita Dhone** வெண்கலப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியின் மகளிர் ஜூனியர் பிரிவில் **Payal** இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றார்.

***End of News***